திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணிக் குழு செயல்பாட்டில் உள்ளதா? மேலும் 1972-ஆம் ஆண்டிலிருந்து எம்.எல்.ஏ.வாக இருந்து வரும் நானும், 1980 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து எம்.பி. யாக இருந்து வரும் சேனாதிபதி கவுண்டரும் இந்தக் குழுவிலே சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். எனவே, எங்களையும் இணைத்து இந்தக் குழுவைத் திருத்தி அமைக்க அரசு முன்வருமா? இந்தக் கோவிலுக்கு உள்ள சொத்தின் மதிப்பு எவ்வளவு? இந்தக் கோவிலுக்கு வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் மற்றவர்களையும் சேர்ப்பது பற்றி துறை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு எண் 8, 9 மற்றும் 10 ஆகியவை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டு, பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்பெறும்.

3. அறிக்கை அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கையை இந்த மாமன்றத்திற்குப் பெருமையுடன் அளிக்கிறேன்.

1987 மே 4.

4. தகவல் கோரல்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: பாயின்ட் ஆப் ஆர்டர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேங்கடரமணன் உட்காருங்கள். அசெம்பளியிலிருந்து பேசுகிற மாதிரிப் பேசவேண்டும். (குறுக்கீடு). என் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றி என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லியாகிவிட்டது. இங்கே கேட்க முடியாது. என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள்.

(முற்பகல் 11-20)

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.